பெயர் ~ P. சசிகலா

பாடசாலை ~ கே/தெஹி/யடதேரிய தமிழ் மகா வித்தியாலயம்

தரம் ~ 10

# பாட அலகு – நாட்டார் வழிபாடு

# நாட்டார் வழிபாட்டு தெய்வங்கள்













நாட்டபர் வழிப்படு என்பது ஆகமம் சாரா வழிபாட்டுக்குள் உள்ளடங்கும், பாரம்பரிய பண்பாட்டு கலைகளிலே அடிப்படையாகும்.

**நாகதம்பிரான்**



**இடும்பன்**



- நாட்டார் வழிபாடு பல பெயர்களைக் கொண்டு அழைக்கப்படும். கிராமிய தெய்வ வழிபாடு, நாட்டார் வழிபாடு, குலதெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு,



- நாட்டார் வழிபாட்டில் சடங்குகள் முக்கியம் பெறுகின்றது.
- சடங்கு என்பது சொல்லுக்குச் செயல் என்பதாகும்.
- சிறுதெய்வ வழிபாட்டில் நம்பிக்கை, பக்தி முக்கியம் பெறுகின்றது.
- ஆகம்ம் சாரா வழிபாடு இலங்கை இந்தியா மற்றும் இந்துக்கள் பாரம்பரியமாக வாழும் இடங்களில் காணலாம்.
- எண்மையான பாரம்பரிய பண்பு அடிப்படையாகும்.








நாட்டார் வழிபாட்டில் திரௌபதை அம்மன் வழிபாடு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். மகாபாரத இதிகாசத்தில் நாயகி. பாஞ்சால மன்னன் புத்திரப்பேறு வேண்டி யாகம்செயகையில் யாக அக்கினியில்  தோன்றியவர்.

பஞ்ச பாண்டவர்களின் மனைவி, துரியோதனன் முதலான தன்னை அநீதியான முறையில் நடத்திய போது வெகுண்டு நீதி கேட்டவள்.

தன்மானத்தை இறை துணையால் காத்துக் கொண்டவள்.

தன்னை அவமானப் படுத்த முயன்ற போது அவிழ்ந்த கூந்தலை துரியோதனன் முதலானோரை அளித்த பின்னரே முடிப்பதாக சபதம் கொண்டவள்.

சபதத்தையும் நிறைவேற்றியவள், நீதி உணர்வும் மான உணர்வும்  வீரமும் கொண்ட பெண்மணி.

ஆகையாலே பொதுமக்களால்  தெய்வ வழியில் வைத்து போற்றப்படுகின்றார்.

- பாண்டிருப்பில் அமைந்துள்ள திரௌபதி அம்மன் ஆலயம் பிரசித்தி பெற்றதாகும். பாண்டியன் உறைந்திருந்த இடம் என்ற காரணத்தினாலேயே பாண்டிருப்பு என்ற பெயர் வந்தது. மட்டக்களப்பு நகரில் இருந்து தெற்கே ஏறக்குறைய முப்பது கிலோ மீட்டர் தொலைவில் பாண்டிருப்பு கிராமம் அமைந்துள்ளது. இங்கு திரௌபதி அம்மன் கோவில் அமைய தாதன் என்பவரே காரணமாக இருந்தான் என தாதன் கல்வெட்டு கூறுகின்றது. வராந்த சடங்குகள் புரட்டாதி மாதத்தில் வரும் ஒரு செவ்வாய்க்கிழமை'கதவு திறத்தல்' வைபவத்துடன் ஆரம்பமாகி அடுத்து வரும் பூரணி யோடு கூடிய ஒரு வெள்ளிக்கிழமையில் நிறைவுபெறும். இச்சடங்கு 18 நாட்கள் இடம்பெறும். இங்கு இடம்பெறும் சடங்குகள்



- கொடியேற்ற சடங்கு
- சமையம் எடுத்தல்
- சுவாமி எழுந்தருளப் பண்னல்
- நாட் கால் வெட்டும் சடங்கு
- கல்யாண கால் வெட்டு சடங்கு
- வனவாசம் போதல்
- தவநிலை சடங்கு
- தீ மிதிப்பு
- பாளையம்

இங்கு இடம்பெறும் சில சடங்குகளில் பாண்டவர் முதலானோர் மகாபாரத கதாபத்ரங்களாகவேடமிட்ட்டு சடங்குகளில் பங்கேற்று வருவது முக்கியமான அம்சமாகும். பாண்டவர் முதலானோர் வேடம் இடுவதற்கு பரம்பரை பரம்பரையாக உரித்துடையவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மகாபாரத கதையை நிகழ்த்திக் காட்டும் வகையில் சில சடங்குகள் அமைகின்றது.

- புத்தளம் மாவட்டத்தில் உடமுந்தல் ஆகிய கிராமங்கள் திரௌபதை அம்மன் ஆலயம் சிறப்பு பெற்று விளங்குகின்றது.
- கிராமிய மக்கள் தங்களது வம்சத்தவர்கள் , குருவம்சம் தருவதாக கருதிக் கொள்கின்றனர்.
- பொது மக்களின் குலதெய்வமாக ரௌதைஅம்மன் விளங்குகின்றார்.
- இவ்வாலயம் அண்மைக் காலத்தில் சத்தியபாமா ருக்மணி சமேத பார்த்தசாரதி கோயிலாக மாற்றப்பட்டது.
- ஆகம முறைப்படி பார்த்தசாரதி பெருமாளுக்கு வழிப்பாடுகள் மேற்கொள்கின்றனர்.
- வருடத்திட்கு ஒரு முறை மார்கழி மாதத்தில் இடம் பெறுகின்றது.
- திரௌபதி அம்மனுக்கு இடம்பெறும் வசனங்கள் பிரசித்தமானது உணர்வு பூர்வமானது வருடாந்த ஆடி மாதத்தில் 18 நாட்கள் இடம்பெறும் பதினெட்டாம் நாள் இடம்பெறும் தீ மிதிப்பு வைபவம் மிகவும் பிரசித்தி பெற்றது 19ஆம் நாள் தர்மர் பட்டாபிஷேகம் இடம்பெறும்.
- மட்டக்களப்பில் மொத்த சடங்குகளை இங்கு இடம் பெறுகின்றது எனலாம்.



# பைரவர் வழிப்பாடு

- பைரவர் வழிபாடு ஆகம முறைப்படியும், முறைசாரா வகையிலும் இடம்பெறும்.
- ஒரு மரநிழலில் திரிசூல வடிவில் மிக எளிய வடிவில் விளங்குவார்.
- பரிவார தெய்வங்களுக்கு மத்தியில் கர்ப்பக் கிரகத்தில் மூல மூர்த்தியாக விளங்குகிறார்.
- விஷேட தினங்களில் விளக்கு ஏற்றப்படும்.
- நித்திய நைமித்திய நெறிகளில் மகோத்சவம் நிகழ்த்தப்படும்.
- பைரவர் கிராம தெய்வம், காவல் தெய்வம், இரத்தப் பலி ஏற்கும் தெய்வம் என பல பெயர்களைக் கொண்டு வழிபடுவர்.
- சிவகுமாரர் அதற்கு மேலாக சிவ மூர்த்தமாக கருதியும் வழிபடுவர்.
- சிவனிடமிருந்து முருகன் சூரசங்காரம் விநாயகர் கஜமுகாசுரன் சுர சங்காரம் செய்தமை குறிப்பிடத்தக்கது.








- சிவபெருமான் இடத்திலிருந்து பைரவர் தோன்றினார்.
- ஐந்து தலைகளை உடைய பிரம்மன் தன்னை சிவனுக்கு நிகராக கருதி சிவநிநதை செய்தபோது ஐந்து தலைகளில் ஒரு தலையைக் கொய்து ஆணவத்தை அடக்கினார்.
- அப்பர் சிவனையும்வைர்ரையும் ஒன்று என கருதி ‘பிரமன் தன் சிரம் அரிந்த பெரியோய் போற்றி’ என த்திப்பார்.
- சிவாகமங்களில், கிராமிய சடங்கப் பாடல்களிலும் வைரவர் மூர்த்தி தொடர்பாக உடுக்கை, சூலம், கபாலம் ஏந்தி இருத்தல், ஆடையற்ற கோலம் திகாம்பர்ராக காட்சியளித்தல்.
- அக்கினிச் சுவலைப்போல்மேல்நோக்கி எழுந்து சிவந்த டை,கரைப் பல்.
- பாம்பை அரைஞான் ஆகவும் பூணூலாகவும் அணிதல்.
- நாயை வாகனமாக கொண்டிருத்தல்.
- வைரவருக்குறியதிரு நாம்ம்சேத்திர பாலகர்.
- சேத்திரம்- இடம் அல்லது தளம் பாலகன் - பரிபாலிப்பவன் அல்லது காவல் செய்வார்.




- காவல் தெய்வமாக கோயில் நகரம் கிராமம் என பல இடங்களில் வீற்றிருப்பார்.
- வைரவர் ஆகம முறைப்படி வழிபாடகையில் ஞானவைரவர் பிரதானமானவர் .
- கால பைரவர் மகா பைரவர் என்ற பெயர்களைக் கொண்டு ழைக்கப்படுகின்றார்.
- கிராமிய வழிபாட்டு முறையில் சுடலை வைரவர், காட்டு வைரவர் ரத்த பைரவர் என்ற பெயர்களைக் கொண்ட அழைப்பர்.
- மிக எளிய முறையிலான வழிபாட்டையே ஏற்றுக்கொள்வார்.
- சுடலையை காடு போன்ற இடங்களில் வீட்டிருந்து மக்களின் அச்சத்தை போக்குவார்.
- இந்துக்கள் சிலருக்கு குலதெய்வமாகவும் போற்றுவர்.
- வைரவருக்கு நாள் தோறும் விளக்கேற்றி விசேட தினங்களில் பொங்கல் வைத்து வடைமாலை சுற்றிவர வழிபடுவர்.




- சித்திரை பரணி, ஐப்பசி பரணி ,தை மாதத்து முதலாம் செவ்வாய்க்கிழமை என்பன பைரவருக்குரிய விசேட தினமாகும்.
- ஆகமம் சாராத வகையில் வைரவர் ஆலயங்களில் ஆண்டுக்கு ஒரு முறை வேள்வி எனும் சடங்கு இடம் பெறும்.
- தற்காலத்தில் வேள் முறையின்றி சாத்வீகமான முறையில் பொங்கல் வைத்து வழிபாடு இடம்பெறுகின்றது.
- மக்கள் மரபுக்கிணங்க செய்து வரும் வழிபாடுகளை வைரவர் ஏற்று அருள் புரிகின்றார்.

# நாட்டார் கலைகள்

- நாட்டார் கலைகள் நாட்டார் வழிபாட்டில் கலையும் முக்கிய அம்சமாக திகழ்கின்றது.
- இசை கூத்து அலங்காரம் என்பன நாட்டார் வழிபாட்டில் முக்கியம் பெறுகிறது.
- நாட்டார் சடங்குகளில் போது அம்மனை சிந்து முதலான பாடல்கள் இசையோடு பாடப்படுகின்றது.
- அவற்றுக்கு பின்னணியாக உடுக்கை மத்தளம் முதலிய தாள வாத்தியங்கள் ஒலிக்க பெறுகின்றது.
- நாட்டார் வழிபாட்டில் கூத்துக்கள் முக்கியம் பெறுகின்றது.
- கூத்துக்கள் சட்டங்களுக்கு புறம்பாக வீதிகளிலும் இடம்பெறுகின்றது.
- சடங்குகளோடு சடங்காகவும் இடம்பெறுகின்றது.
- திரௌபதி அம்மன் கோயிலில் பஞ்சபாண்டவர் முதலான வேடங்கள் உதாரணமாக கூறலாம்.





- சடங்கு காலத்தில் காவடியாட்டம், கரகாட்டம் கூத்து என்பன இடம் பெறும்.
- இக்கலையில் ஒப்பனை பிரதான இடத்தை பெறுகின்றது.
- கூத்து பாத்திரம், பிற ஆட்டம் என்பவற்றுக்கிணங்க அமைகின்றது.



- காவடி , கரகம் முதலானவற்றை தயாரிப்பதில் அலங்காரக் கலை முதன்மை பெறுகின்றது.
- சடங்கு காலங்களில் கும்பம் அலங்கரித்தல்,  கோயில் வளாகம் அலங்கரித்தல் என்பன முதன்மை பெறுகின்றது.
- உதாரணம் தோரணங்கள், குருத்தோலை, இலை குழை, மூங்கில் காடுகளும் உயர்ந்து விரிந்த வாயில் அமைக்கப் பெற்றிருக்கும்.
- கிராமிய வழிபாட்டில் இயற்கை முக்கியத்துவம் பெறுவதைக் காணலாம்.












நன்றி...

